Australian Government
Department of Home Affairs

# அவுஸ்திரேலியாவுக்குள் நுழைவது

அவுஸ்திரேலியாவில் நுழைவதற்கு, கீழே கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைக் கடைப்பிடிக்கவும்.

## படிநிலை 1 - உங்கள் விசா விதிமுறைகள் குறித்து சரிபார்க்கவும்

விசா இல்லாமல் அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல முயற்சிக்காதீர்கள். எங்களது விசா ஃபைண்டர் என்ற மென்கருவியைப் பயன்படுத்தி விசா விருப்பங்கள் குறித்துத் தெரிந்துக் கொள்ளலாம்.

நீங்கள் அவுஸ்திரேலியாவில் நுழைவதற்கு பயண விலக்குப் பெற விண்ணப்பித்து, அதற்கான ஒப்புதலையும் பெற **வேண்டியிருக்கலாம்.** (கீழே கொடுக்கப்பட்டுள்ள படிநிலை 3 ஐப் பார்வையிடவும்).

## படிநிலை 2 - நீங்கள் பூர்த்தி செய்ய வேண்டிய தடுப்பூசி விதிமுறைகளைச் சரிபார்க்கவும்

அவுஸ்திரேலியாவில் நுழைவதற்கு நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை உங்கள் தடுப்பூசி நிலவரம் தீர்மானிக்கும்.

சர்வதேசப் பயணங்கள் மேற்கொள்ள அவுஸ்திரேலியாவின் தடுப்பூசி விதிமுறைகளை நீங்கள் பூர்த்தி செய்யாதபோது கருத்தில் கொள்வதற்கு பல விஷயங்கள் உள்ளன. கீழே கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றவும்.

மருத்துவக் காரணங்களுக்காக உங்களுக்குத் தடுப்பூசி போட்டுக்கொள்ள முடியாவிட்டால், தடுப்பூசி போட்டுக்கொண்ட பயணிகளின் அதே ஏற்பாட்டினை நீங்கள் அணுகலாம். ஏற்றுக்கொள்ளக்கூடிய மருத்துவச் சான்றுகளை நீங்கள் வழங்க வேண்டும். உங்கள் பார்வைக்கு: தடுப்பூசி மற்றும் பரிசோதனை.

**அவுஸ்திரேலியாவிற்கு வருகைப்புரியும் பின்வரும் விசாதாரர்களின் விசா ரத்து செய்யப்படலாம், மேலும் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டு திருப்பி அனுப்பப்படலாம்:**

- **அவுஸ்திரேலியாவின் எல்லைக்குள் நுழைவதற்கான விதிமுறைகளுக்கு ஏற்ப, சர்வதேச பயணத்திற்குத் தேவையான தடுப்பூசி முழுவதையும் போட்டுக்கொள்ளாதவர்கள்; அல்லது**
- **அவுஸ்திரேலிய அரசாங்கத்தால் வரையறுக்கப்பட்டுள்ளவாறு, கோவிட்-19 தடுப்பூசிக்கு மருத்துவரீதியாக ஒவ்வாமை எதுவும் இல்லாதவர்கள்; அல்லது**
- **தடுப்பூசி போட்டுக்கொள்வதிலிருந்து *விலக்களிக்கப்பட்ட பிரிவில் இல்லாதவர்கள்* அல்லது தனிப்பட்ட முறையில் பயண விலக்கு பெற்றவர்கள்.**

## படிநிலை 3 - பயண விலக்குக்கு விண்ணப்பிக்கவும்

அவுஸ்திரேலியாவின் தடுப்பூசி விதிமுறைகளை நீங்கள் பூர்த்தி செய்யவில்லை என்றால், அவுஸ்திரேலியாவிற்குள் நுழைவதற்கான பயண விலக்குக்கும் நீங்கள் விண்ணப்பிக்க **வேண்டியிருக்கலாம்.**

மேலதிகத் தகவலுக்கும், எப்படி விண்ணப்பிப்பது என்பது பற்றிய தகவலுக்கும் அவுஸ்திரேலியாவில் நுழைவதற்கான விலக்கு தொடர்பான செயல்முறை என்பதைப் பார்வையிடவும்.

## படிநிலை 4 - மாநிலம் மற்றும் பிரதேச வருகை தொடர்பான விதிமுறைகளைச் சரிபார்க்கவும்

விமானத்தை முன்பதிவு செய்வதற்கு முன், நீங்கள் வருகைப் புரியவிருக்கும் மாநிலம் மற்றும் பிரதேசத்தின் வருகை தொடர்பான விதிமுறைகளைச் சரிபார்க்கவும். இதில் எல்லைக்குள் நுழைவதற்கான பதிவுப் படிவங்கள் அல்லது தனிமைப்படுத்தல் ஆகியவை அடங்கும்.

நீங்கள் கடந்து போக்குவரத்து செய்யவிருக்கும் மற்றும் பயணிக்கவிருக்கும் மாநிலங்கள் மற்றும் பிரதேசங்கள் அனைத்தில் உள்ளவற்றையும் சரிபார்க்கவும். குறுகிய கால அறிவிப்பில் இந்த விதிமுறைகள் மாறலாம். **நீங்கள் உங்களைத் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கலாம்.**

உங்களுக்குப் பொருந்தக்கூடிய பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்குவதற்கு நீங்களே பொறுப்பாவீர்கள். அவ்வாறு நீங்கள் இணங்கவில்லை என்றால், நீங்கள் கடுமையான தண்டனைகளைச் சந்திக்க நேரிடும், இதில் சிறைத்தண்டனை மற்றும்

குறிப்பிடத்தக்க அபராதங்கள் ஆகியன அடங்கும்; கட்டுப்பாடுகள் மற்றும் விதிமுறைகள் குறித்து தெரிந்துக் கொள்ள: மாநிலம் மற்றும் பிராந்திய வருகை தொடர்பான விதிமுறைகள் என்பதைப் பார்வையிடவும்.

## படிநிலை 5 - முன்னதாகவே திட்டமிடுங்கள்

நீங்கள் பயணம் செய்கையில் தாமதங்கள் மற்றும் இடையூறுகள் ஏற்பட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள் என்பது குறித்த விஷயங்களை நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.

விமான நிறுவனங்களும் அவற்றுக்கென்று சில விதிமுறைகளைக் கொண்டிருக்கலாம், அவற்றையும் நீங்கள் பூர்த்தி செய்ய வேண்டியிருக்கும். **தடுப்பூசி போட்டுக்கொள்ளாத பயணிகள் வருகைப்புரியும் பயணிகளின் எண்ணிக்கைகளுக்கு ஏற்பவே அனுமதிக்கப்படுவர், மேலும் அவர்கள் மாநில மற்றும் பிராந்திய வருகை தொடர்பான விதிமுறைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.**

உங்களுக்குச் சம்பந்தப்பட்டதாக இருந்தால், அவுஸ்திரேலியாவை விட்டு வெளியேற நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பார்க்கவும்.

## படிநிலை 6 - உங்கள் பயணத்தை முன்பதிவு செய்திடுங்கள்

## படிநிலை 7 - உங்கள் டிஜிட்டல் முறையிலான பயணிகள் பிரகடனத்தை நிறைவு செய்யவும்

உங்கள் விமானப் பயண நேரத்தின் ஏழு நாட்களுக்கு முன்னதாகவே உங்கள் டிஜிட்டல் பயணிகள் பிரகடனத்தை (Digital Passenger Declaration, DPD) தொடங்கி, அவுஸ்திரேலியாவுக்குப் புறப்படுவதற்கு 72 மணிநேரத்திற்குள் அதைச் சமர்ப்பிக்கலாம்.

DPD உங்களது ஆரோக்கியம் தொடர்பாக முக்கியமான தகவலைக் கோருகிறது. இந்தத் தகவலை வழங்குவது நடைமுறையில் இருக்கும் ஒரு விதிமுறையாகும். விமான நிலையத்திலோ, நீங்கள் அவுஸ்திரேலியாவிற்கு வந்தடையும்போதோ தேவையற்ற தாமதங்களை நீங்கள் எதிர்கொள்ளாமல் இருப்பதை உறுதிசெய்ய இது உதவும். மேலதிகத் தகவலுக்கு, பின்வருவனவற்றைப் பார்வையிடவும்: DPD.

## படிநிலை 8 - புறப்படுவதற்கு முன் கோவிட்-19 பரிசோதனை செய்துக் கொள்ளுங்கள்

சமீபத்தில் நீங்கள் செய்துக் கொண்ட கோவிட்-19 பரிசோதனையின் நெகட்டிவ் ஆதாரத்தை விமான ஊழியர்களிடம் நீங்கள் காட்ட வேண்டியிருக்கும்.

நீங்கள் என்ன பரிசோதனை செய்ய வேண்டும் மற்றும் எப்போது பரிசோதனையை செய்துக் கொள்ள வேண்டும் என்பது பற்றிய மேலதிகத் தகவலுக்கு தடுப்பூசி மற்றும் பரிசோதனை என்பதைப் பார்வையிடவும்.

## படிநிலை 9 - விமான நிலையத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டிய உங்கள் ஆவணங்களைத் தயார்நிலைப்படுத்தவும்

உங்கள் விமானத்திற்கு நீங்கள் செக்-இன் செய்யும்போது, உங்களுடைய பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பிக்கும்படி விமான நிறுவன ஊழியர் உங்களிடம் கேட்டுக்கொள்வார்:

- பாஸ்போர்ட்
- விசா
- பயண விலக்கு அனுமதி, தேவைப்பட்டால்
- நெகட்டிவ் கோவிட்-19 பரிசோதனை முடிவு
- நிறைவு செய்யப்பட்ட DPD.

## படிநிலை 10 - அவுஸ்திரேலியாவுக்கான நுழைவு விதிமுறைகளைப் பூர்த்தி செய்யுங்கள்

குடியேற்றம், சுங்கம் மற்றும் தீங்கு விளைவிக்கும் பொருட்களுக்கு எதிரான பாதுகாப்பு அனுமதி ஆகியவை இதில் அடங்கும். மேலதிகத் தகவலுக்கு எல்லையைக் கடப்பது என்பதைப் பார்வையிடவும்.

## படிநிலை 11 - மாநிலம் மற்றும் பிரதேசத்தின் வருகை தொடர்பான விதிமுறைகளைப் பூர்த்தி செய்தல்

பெரும்பாலான மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களில் நீங்கள் அவுஸ்திரேலியாவுக்குள் வந்தவுடன் கோவிட்-19 பரிசோதனையைச் செய்திட வேண்டும்.

**தடுப்பூசி போட்டுக்கொள்ளாத பயணிகள் வருகைப்புரியும் பயணிகளின் எண்ணிக்கைகளுக்கு ஏற்பவே அனுமதிக்கப்படுவர், மேலும் அவர்கள் மாநில மற்றும் பிராந்திய வருகை தொடர்பான விதிமுறைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். நீங்கள் உங்களைத் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கலாம்.** நீங்கள் இதையும், நீங்கள் கடந்து போக்குவரத்து செய்யவிருக்கும் மற்றும் பயணிக்கவிருக்கும் மாநிலங்கள் மற்றும் பிரதேசங்கள் அனைத்துடைய வேறு ஏதேனும் விதிமுறைகளையும் சரிபார்க்க வேண்டும்.

# அவுஸ்திரேலியா வழியாகக் கடந்து செல்லுதல்

## 72 மணிநேரம் அல்லது அதற்கும் குறைவான கடப்பு நேரம்

பயணத்தின்போது நீங்கள் அவுஸ்திரேலியாவை கடந்து செல்கிறீர்கள் என்றால், நீங்கள் அங்கு நுழைந்தப் பிறகிலிருந்து 72 மணிநேரத்திற்கு மிகாமல் அவுஸ்திரேலியாவிலிருந்து புறப்படும் விமானத்தில் நீங்கள் **கட்டாயம்** டிக்கெட்டைப் பெற்றிருக்க வேண்டும். பொருத்தமான இணைப்பு விமானம் இல்லை என்றால், அவுஸ்திரேலியா வழியாக போக்குவரத்து செய்வது **சாத்தியமில்லை**.

72 மணிநேரம் அல்லது அதற்கும் குறைவான காலத்திற்கு அவுஸ்திரேலியா வழியாக பயணிக்கும் போது நீங்கள் பயண விலக்குக்கு விண்ணப்பிக்க வேண்டிய **அவசியமில்லை**.

### விசா விதிமுறைகள்

அவுஸ்திரேலியா வழியாகக் கடந்துச் செல்ல, நீங்கள் செல்லுபடியாகும் விசா வைத்திருக்க வேண்டும் அல்லது விசா இல்லாமல் கடக்கும் (TWOV) சலுகை உடைய நாட்டினராக இருக்க வேண்டும்.

நீங்கள் செல்லுபடியாகும் விசாவை வைத்திருக்கவில்லை என்றாலோ, விசா இல்லாமல் கடப்பதற்கு (TWOV க்கு) தகுதி பெறவில்லை என்றாலோ, அவுஸ்திரேலியாவில் நுழைய நீங்கள் விசாவிற்கு விண்ணப்பிக்க வேண்டும். 72 மணிநேரம் வரை அவுஸ்திரேலியாவைக்

கடந்துச் செல்ல கடந்துச் செல்வதற்கான விசா (துணைப்பிரிவு 771) -க்கு விண்ணப்பிக்க வேண்டும்.

## கோவிட்-19 பரிசோதனை

அவுஸ்திரேலியாவைக் கடக்க, உங்களுக்கு நெகட்டிவ் கோவிட்-19 பரிசோதனை தேவை. மேலதிகத் தகவலுக்கு தடுப்பூசி மற்றும் பரிசோதனை என்பதைப் பார்வையிடவும்.

## டிஜிட்டல் முறையிலான பயணிகள் பிரகடனம்

உங்கள் விமானப் பயண நேரத்தின் ஏழு நாட்களுக்கு முன்னதாகவே உங்கள் டிஜிட்டல் பயணிகள் பிரகடனத்தை (Digital Passenger Declaration, DPD) தொடங்கி, அவுஸ்திரேலியாவுக்குப் புறப்படுவதற்கு 72 மணிநேரத்திற்குள் அதைச் சமர்ப்பிக்கலாம்.

DPD உங்களது ஆரோக்கியம் தொடர்பாக முக்கியமான தகவலைக் கோருகிறது. இந்தத் தகவலை வழங்குவது நடைமுறையில் இருக்கும் ஒரு விதிமுறையாகும். விமான நிலையத்திலோ, நீங்கள் அவுஸ்திரேலியாவிற்கு வந்தடையும்போதோ தேவையற்ற தாமதங்களை நீங்கள் எதிர்கொள்ளாமல் இருப்பதை உறுதிசெய்ய இது உதவும். மேலதிகத் தகவலுக்கு, பின்வருவனவற்றைப் பார்வையிடவும்: DPD.

## மாநிலம் மற்றும் பிரதேசத்தின் விதிமுறைகள்

நீங்கள் வருகைப்புரியும் மாநிலம் அல்லது பிரதேசத்திற்கான போக்குவரத்து விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். **தடுப்பூசி போட்டுக்கொள்ளாத பயணிகள் வருகைப்புரியும் பயணிகளின் எண்ணிக்கைகளுக்கு ஏற்பவே அனுமதிக்கப்படுவர், மேலும் அவர்கள் மாநில மற்றும் பிராந்திய வருகை தொடர்பான விதிமுறைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.**

நீங்கள் ஹோட்டலில் தங்க வேண்டியிருக்கலாம், மேலும் உங்கள் விமானத்திற்காக நீங்கள் காத்திருக்கும் போது, நீங்கள் தங்குவதற்கு கட்டணம் செலுத்தும்படி கேட்கப்படலாம். மேலதிகத் தகவலுக்கு மாநிலம் மற்றும் பிராந்தியம் தொடர்பான வருகை விதிமுறைகளைப்பார்வையிடவும்.

## 72 மணிநேரத்திற்கும் அதிகமான கடப்பு நேரம்

நீங்கள் இணைக்கும் விமானத்தில் செல்வதற்கு முன் அவுஸ்திரேலியாவில் 72 மணிநேரத்திற்கு மேல் செலவழித்தால், நீங்கள் அவுஸ்திரேலியாவை கடந்துச் செல்வதாக **கருதப்படாது**.

அவுஸ்திரேலியாவுக்கான மற்ற நுழைவு விதிமுறைகள், கோவிட்-19 தடுப்பூசி மற்றும் பரிசோதனை விதிமுறைகள் என அனைத்தையும் நீங்கள் பூர்த்தி செய்ய வேண்டும். குடியேற்றம், சுங்கம், தீங்கு விளைவிக்கும் பொருட்களுக்கு எதிரான பாதுகாப்பு அனுமதி மற்றும் ஆரோக்கியம் குறித்த கட்டாய பிரகடனங்கள் ஆகியவை இதில் அடங்கும். மேலதிகத் தகவலுக்கு எல்லையைக் கடப்பது என்பதைப் பார்வையிடவும்.

நீங்கள் மாநிலம் மற்றும் பிரதேசத்தின் வருகை விதிமுறைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும்.